DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 745/2017**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 32 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு. சாமித்துரை |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of January 2025.

**(A1 to A3, A5 present. A4 absent. Petition filed and allowed.)**

<u>**முதல் விசாரணை**</u>

எனக்கு சொந்த ஊர் அச்சன்புதூர் ஆகும். தற்போது மடத்துப்புரத்தில் குடியிருந்து வருகிறேன். பலகார மாஸ்டராக வேலை செய்கிறேன். நான் அச்சன்புதூரில் குடியிருந்தபோது ஆட்டோ ஓட்டிக்கொண்டிருந்தேன். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு இரவு 11.00 மணியளவில் நானும் என்னுடைய மகன் குமாரும் வந்துகொண்டிருந்தபோது சண்டியர் வழக்கு சம்பந்தமாக அச்சன்புதூர் காவல் ஆய்வாளர் அச்சன்புதூர் நாகூர் ஹனிபா கடையின் அருகே வைத்து எங்களை

விசாரித்தார்கள். சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த **பார்வை மகசர் அ.சா.ஆ.24** ஆகும். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

நான் அங்கே செல்லும்போது போலீசார் ஸ்டேட்மென்ட் எழுதிக்கொண்டிருந்தார்கள், அதில் என்ன எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. எங்கள் ஊருக்கும் வரைபடம் வரைந்த சம்பவ இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் அச்சன்புதூரில் தான் வரைபடம் தயார் செய்தார்கள். போலீசார் கேட்டுக்கொண்டதால் தான் நானும் எனது மகனும் கையெழுத்து போட்டோம் என்றால் சரிதான். இறந்துபோன சண்டியர் எனது உறவினரா என்றால் இல்லை, பழக்கமும் கிடையாது. வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை. நான் தற்போது முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை தற்போது தான் முதல்முதலாக சொல்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் சொல்லிக்கொடுத்ததன்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 745/2017**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 33 |
| | | Defence |
| | | Court |
| Name | : | டாக்டர் திரு. செல்வமுருகன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of January 2025.

**(A1 to A3, A5 present. A4 absent. Petition filed and allowed.)**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம்சார்ந்த மருத்துவதுறையில் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 14.08.2017 அன்று அதே துறையில் இணை பேராசிரியராக பணிபுரிந்தபோது, பாளையங்கோட்டை காவல் ஆய்வாளரிடமிருந்து கு.எண். 608/2015 வழக்கில் சம்பந்தப்பட்ட ராஜகோபால் (எ) சண்டியர் என்ற நபரின் தலையில்லா உடம்பு பகுதியை பிரேத பரிசோதனை செய்வதற்குரிய வேண்டுகோள்

கடிதத்தை காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சொர்ணம் என்பவரின் மூலம் மதியம் 12.30 மணிக்கு பெற்றுக்கொண்டேன். அந்த பிரேதத்தை பொறுப்பு காவலரால் எங்கள் துறை பிரேத பரிசோதனை அறையில் அடையாளம் காட்டப்பட்டு மதியம் 12.40 மணிக்கு பிரேத பரிசோதனையை தொடங்கினேன்.

பிரேதம் அழுக ஆரம்பித்த நிலையில் காணப்பட்டது. அதன் கை மற்றும் கால் விரல் நகங்கள் வெளிறி காணப்பட்டது. அதில் காணப்பட்ட காயங்கள், தலையில்லாத உடல் பகுதியாக காணப்பட்டது. உடல் பகுதி ஊதிய நிலையில் காணப்பட்டது. தலைப்பகுதி கழுத்தின் கீழ்பகுதியில் இருந்து துண்டாக்கப்பட்டதாக காணப்பட்டது. பின் கழுத்து பகுதியில் உள்ள தோல் உடல் பகுதியுடன் ஒட்டிக்கொண்டிருந்தது. இறந்தபின் உண்டான தீக்காயம் உடம்பின் முன் மற்றும் பக்கவாட்டு பகுதியில் காணப்பட்டது. அடிவயிற்றுப்பகுதி மற்றும் ஆணுறுப்பு பகுதியில் தீக்காயம் காணப்படவில்லை. முதுகுப்பகுதியில் தரையில் பட்டுக்கொண்டிருந்த பகுதி மற்றும் காலின் பாதங்களில் தீக்காயம் காணப்படவில்லை.

தீக்காயம் பட்டிருந்த இடங்களிலிருந்த தோல் கறுத்தும் உரிந்தும் காணப்பட்டது. தீக்காயத்தின் அடிப்புறம் இருந்த தோல் மஞ்சள் நிறத்தில் காணப்பட்டது. பின் கழுத்து பகுதியில் உள்ள தோலில், இறப்பிற்கு முன் ஏற்பட்ட 5 வெட்டுக்காயங்கள் ஒன்றன் கீழ் ஒன்றாக காணப்பட்டது. அவைகளுக்கிடையே உள்ள இடைவெளி 1 – 1.5 செ.மீ அளவுடையதாக இருந்தது. கீழ்ப்புறமாக இருந்த 5வது வெட்டுக்காயம் கழுத்தின் அடிப்பகுதியில் இருந்து 3 செ.மீ–க்கு மேலே காணப்பட்டது. அது கழுத்தின் வலது பகுதியில் இருந்து இடது பகுதி வரை நீண்டு இருந்தது. அதன் நீளம் 15 செ.மீ. அதன் அடிப்புறம் இருந்த சதைகள், ரத்தக்குழாய்கள், நரம்புகள் மற்றும் தைராய்டு குறுத்தெலும்பு ஆகியவை வெட்டுப்பட்டு காணப்பட்டது. கழுத்தின் இடது புறத்தில் 19 செ.மீ நீளமுடைய இறப்பிற்கு பின் ஏற்பட்ட வெட்டுக்காயம் காணப்பட்டது. அது முன் கழுத்தின் இடது புறத்திலிருந்து பின் கழுத்தின் இடது புறம் வரை நீண்டிருந்தது. அதன் கீழ் உள்ள சதைகள் வெட்டுப்பட்டு காணப்பட்டது.

8 x 1 x 1 cm அளவுள்ள ஒரு சாய்வான வாய் விரிந்த இறப்பிற்கு முன் ஏற்பட்ட வெட்டுக்காயம் இடது கை மணிக்கட்டின் உட்புறம் காணப்பட்டது. அதன் கீழ் இருந்த சதைகள் வெட்டுப்பட்டு காணப்பட்டது. 18 x 1 x 2 cm அளவுள்ள ஒரு கிடைமட்டமான வாய் விரிந்த இறப்பிற்கு முன் ஏற்பட்ட வெட்டுக்காயம் இடது மேல் கையில்

வெளிப்புறம், முன்புறம் மற்றும் உட்பகுதியில் கையின் நடுவே காணப்பட்டது. அதன் கீழுள்ள சதைகள் வெட்டுப்பட்டு காணப்பட்டது. 28 x 2 x 10 cm அளவுள்ள ஒரு சாய்வான வாய்விரிந்த இறப்பிற்கு முன் ஏற்பட்ட வெட்டுக்காயம் இடது தோள்பட்டையின் மேல்புறம் காணப்பட்டது. அதன் கீழுள்ள சதைகள் மற்றும் இடது மேல்கை எலும்பு வெட்டுப்பட்டு காணப்பட்டது. 1 x 1 x 0.5 cm அளவுள்ள இறப்பிற்கு முன் உள்ள வெட்டுக்காயம் இடது புற முழங்கையின் பின்புறம் காணப்பட்டது. 2 x 1 cm அளவுள்ள இறப்பிற்கு முன் ஏற்பட்ட சிராய்ப்பு காயம் இடது கால் முட்டியில் காணப்பட்டது.

உள் உறுப்புகளின் பரிசோதனையில், இருதயத்தின் வெளிப்புற சவ்வு இருதயத்துடன் ஒட்டி காணப்பட்டது. இருதய ரத்தக்குழாய்களில் கொழுப்பு படிந்து காணப்பட்டது. இரைப்பையில் 50 கி. அளவில் சிறிதளவு செரிமானமான உணவுப்பொருட்கள் குறிப்பிடத்தக்க எந்த வாடையும் இல்லாமல் காணப்பட்டது. அதன் உட்புற சவ்வு வெளிறி காணப்பட்டது.

நுரையீரல்கள், கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் மென்மையாக காணப்பட்டன. அவைகளின் குறுக்கு வெட்டுத்தோற்றம் வெளிறி காணப்பட்டது. சிறுகுடலில் 50 கி. அளவில் சிறிதளவு செரிமானமான உணவுப்பொருட்கள் குறிப்பிடத்தக்க எந்த வாடையும் இல்லாமல் காணப்பட்டது. அதன் உட்புற சவ்வு வெளிறி காணப்பட்டது.

சிறுநீர்ப்பையில் 20 மி.லி அளவில் சிறுநீர் காணப்பட்டது. தீக்காயம் பட்டிருந்த இடத்திலிருந்து தோல் சேகரிக்கப்பட்டு தீ எரிவதற்கு உபயோகப்படுத்தப்பட்ட பொருளை கண்டறிவதற்கு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. தொடைப்பகுதியிலிருந்து சதைகள் மற்றும் வலது தொடை எலும்பு டி.என்.ஏ பரிசோதனைக்காக சேகரிக்கப்பட்டது. உள் உறுப்புகள் ரசாயன பரிசோதனைக்காக சேகரிக்கப்பட்டது. உள் உறுப்புகளின் ரசாயன பரிசோனையின் அறிக்கையில் அவற்றில் எந்தவித நச்சுப்பொருட்களும் கண்டறியப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அறிக்கையை பெற்ற பின் பிரேத பரிசோதனை இறுதி அறிக்கையை வழங்கினேன். அதில் இறப்பிற்கான காரணத்தை உறுதியாக கூறமுடியாது. ஆனால், கழுத்தில் காணப்பட்ட காயங்களினால் உண்டான அதிர்ச்சி மற்றும் ரத்தப்போக்கினால் மரணம் ஏற்பட வாய்ப்பில்லை என்று கூறமுடியாது என சான்று வழங்கினேன். மேலும் மரணம் பிரேத பரிசோதனைக்கு

முன்பு 24 – 48 மணிநேரத்திற்குள் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்று கருத்து வழங்கினேன். மேற்கண்ட காயங்கள் கூர்மையான ஆயுதங்களால் ஏற்பட வாய்ப்புண்டு. நான் வழங்கிய **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ. 25** ஆகும்.

பாளையங்கோட்டை காவல்நிலைய குற்ற எண். 610/2015 வழக்கில் சம்பந்தப்பட்ட தலைப்பகுதியை பரிசோதனை செய்வதற்காக வேண்டுகோள் கடிதத்தை காவல் ஆய்வாளரிடமிருந்து காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ராமகிருஷ்ணன் என்பவர் மூலம் 14.08.2015ம் தேதி மதியம் 12.30 மணிக்கு பெற்றுக்கொண்டேன். தலைப்பகுதியை மதியம் 01.10 மணிக்கு பரிசோதனை செய்ய தொடங்கினேன்.

தலைப்பகுதியில் தீக்காயம் காணப்பட்டது. தலைப்பகுதியில் சதைகள் காணப்படவில்லை. தலைத்தோல் தீக்காயத்துடன் தலை எலும்புடன் சில இடங்களில் ஒட்டி காணப்பட்டது. தலையில் 15 x 1 cm x எலும்பு வரை ஆழமுடைய ஒரு சாய்வான இறப்பிற்கு முன் ஏற்பட்ட வெட்டுக்காயம் பின் தலை பகுதியில் காணப்பட்டது. 15 x 2 cm x எலும்பு வரை ஆழமுடைய இறப்பிற்கு முன் ஏற்பட்ட கிடைமட்டமான வெட்டுக்காயம் பின் கழுத்தின் மேல் பகுதியில் காணப்பட்டது. அதன் கீழ் உள்ள சதைகள் 2 வது cervical கழுத்தெலும்பின் கீழ்பகுதி மற்றும் தண்டுவடம் வெட்டப்பட்டு காணப்பட்டது. 3 x 2 cm அளவுள்ள எலும்பு பகுதி உடைந்து தலையின் வலது பக்கவாட்டு பகுதியின் உட்புறமாக சென்றிருந்தது. அது இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயம் போல் காணப்பட்டது. 10 cm நீளமுடைய சாய்வான இறப்பிற்கு முன் ஏற்பட்ட வெட்டுக்காயம் 5cm ஆழத்துடன் முகத்தின் வலது பகுதியில் காணப்பட்டது. அந்த வெட்டுக்காயத்தின் கீழ் புறம் உள்ள வலது மேல் தாடை எலும்பு காணப்படவில்லை. வலது மற்றும் இடது மேல் தாடை எலும்புகள் ஒரு சாய்வான வெட்டுக்காயத்தினால் வெட்டப்பட்டு துண்டான பகுதிகள் ஒன்றையொன்று ஒத்திருந்தன. கீழ்த்தாடை காணப்படவில்லை. கழுத்தின் முன்புறமுள்ள சதைகள் மற்றும் எலும்புகள் காணப்படவில்லை.

மூளை மென்மையாக காணப்பட்டது. அதன் குறுக்கு வெட்டு தோற்றத்தில் வெளிறி காணப்பட்டது. தலை எலும்பு சேகரிக்கப்பட்டு Super imposition பரிசோதனைக்காக காவலரிடம் ஒப்படைக்கப்பட்டது. தலைப்பகுதியிலிருந்து தோல் சேகரிக்கப்பட்டு தீக்காயம் உண்டாக உபயோகப்படுத்தப்பட்ட பொருளின் தன்மையை கண்டறிய அனுப்பப்பட்டது. பரிசோதனை செய்யப்பட்ட நபரின் தலையை வைத்து அவர்

எவ்வாறு இறந்தார் என்று கூறமுடியவில்லை. ஆனால், தலையில் காணப்பட்ட இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் மரணம் விளைவிக்கக்கூடியவை ஆகும். மரணம் பரிசோதனைக்கு முன்பு 24 – 48 மணி நேரத்திற்குள் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உண்டு என்று கருத்து தெரிவித்து சான்று வழங்கினேன். நான் வழங்கிய பிரேத **பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ. 26** ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் அரிவாளால் தாக்கினால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் இறந்துபோன நபரின் இறப்பிற்கு முன் ஏற்ப்பட்ட காயங்களையும் இறப்பிற்கு பின் ஏற்பட்ட காயங்களையும் பார்த்துள்ளேன் என்றால் சரிதான். ஒரு நபர் இறந்த 24 மணி நேரத்தில் பிரேத விறைப்புத்தன்மை மறைந்து உடல் அழுக ஆரம்பித்துவிடும் என்றால் சரியல்ல. எவ்வளவு நேரத்தில் பிணம் அழுக ஆரம்பிக்கும் என்றால் 36 மணி நேரத்திற்கு மேல் தான் அழுக ஆரம்பிக்கும். நான் பார்த்த பிணத்தில் பிணம் அழுக ஆரம்பித்து அதில் புழுக்கள் காணப்பட்டதா என்றால் பிணம் அழுக ஆரம்பித்தது, ஆனால் புழுக்கள் காணப்படவில்லை. எத்தனை மணி நேரத்தில் புழுக்கள் உருவாக ஆரம்பிக்கும் என்றால் 2 – 3 நாட்களில் புழுக்கள் உருவாக ஆரம்பிக்கும். என்னுடைய கருத்து மோடி Medical Jurisprudence கருத்துக்களுக்கு எதிரானது என்றால் சரியல்ல. கழுத்தில் ஏற்பட்ட காயங்கள் முதலில் ஏற்பட்டிருந்தால் உடனே மரணம் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் வாய்ப்புண்டு.

உடலில் காணப்பட்ட சிராய்ப்பு காயங்கள் தரையில் உடலை இழுப்பதால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சொரசொரப்பான தரையில் விழும்போது ஏற்பட வாய்ப்புண்டு. நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கையில், மரணத்தின் காரணம் குறித்து உறுதிபட குறிப்பிட இயலாது என தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எனது கருத்துக்கள் அங்கீகரிக்கப்பட்ட சட்ட மருத்துவ கருத்துரைக்கு எதிரானது என்றும், எனது சாட்சியம் ஏற்கத்தக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S
Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 745/2017**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 34 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு. சங்கரபாண்டியன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of January 2025.

**(A1 to A3, A5 present. A4 absent. Petition filed and allowed.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநெல்வேலி மாநகர ஆயுதப்படையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 13.08.2015ம் தேதி அன்று தலைமை காவலராக நெல்லை மாநகர புகைப்பட பிரிவில் பணியாற்றிய போது, காலை 10.15 மணியளவில் பாளையங்கோட்டை காவல்நிலைய ஆய்வாளர் பொறுப்பு அவர்களின் வேண்டுகோளின்படி பாளையங்கோட்டை காவல்நிலைய குற்ற எண். 608/2015 சட்டப்பிரிவு 302, 201 இ.த.ச வழக்கில் சம்பவ இடமான திம்மராஜபுரம் பைபாஸ்ரோடு

கீழ்பக்கம் கீழநத்தம் ரோட்டில் மேல்பக்கம் மூளிகுளம் என்ற கரையின் வடகிழக்கு மூலையில் தலை இல்லாத முண்டமாக கிடந்த பிரேதத்தை பல கோணங்களிலும், சம்பவ இடத்தையும் சுற்றுப்புறங்களையும் 8 கோணங்களில் புகைப்படம் எடுத்தேன். புகைப்பட பிரதிகளையும் அதன் குறுந்தகடையும் சம்பந்தப்பட்ட ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். நான் எடுத்த **புகைப்படங்கள் அடங்கிய குறுந்தகடு அ.சா.ஆ.27** ஆகும். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

அன்றையதினம் பிரேதத்தை புகைப்படம் எடுப்பதற்கு ஆய்வாளர் எழுத்துப்பூர்வமான உத்தரவு எதுவும் எனக்கு வழங்கவில்லை என்றால் சரிதான். நான் புகைப்படம் எடுத்த விவரம் எங்கள் காவல்நிலைய பொதுநாட்குறிப்பில் துலங்கும் என்றால் சரிதான். இந்த வழக்கு விஷயமாக என்னை ஆய்வாளர் விசாரித்தபோது பொதுநாட்குறிப்பை நான் கொடுத்தேனா என்றால் இல்லை. ஆய்வாளர் என்னை விசாரித்தபோது, மூளிகுளம் கரையில் தலையில்லாத முண்டம் கிடந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். 8 கோணங்களில் புகைப்படங்கள் எடுத்த விவரத்தையும் ஆய்வாளரின் விசாரணையின்போது நான் தெரிவித்தேன் என்றால் சரிதான். எனக்கு அந்த பணிக்கு கடவுச்சீட்டு வழங்கப்படவில்லை என்றால் சரிதான்.

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல், 13.08.2015 ம் தேதி தலையில்லாத முண்டத்தை புகைப்படம் எடுத்ததாக சொல்வது பொய் என்றும், உயரதிகாரிகளின் அழுத்தத்தின் காரணமாக உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi